Registered as a News Paper பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் 15-4-1993

# ஈழநாதம்

நாதம் 04 | திருவள்ளுவர் | ஆண்டு 2024 | பங்குனி 31 | [ 13 . 04 . 1993 ] | செவ்வாய்க்கிழமை | ஓசை 54

## மனித பாவனைக்கு உதவா அரிசி வகைகள் விற்பனை

(கொழும்பு)

மனித பாவனைக்கு ஒவ்வாத அரிசி வகைகள் கொழும்புச் சந்தையில் காணப்படுவதாக அரச உணவுத் திணைக்கள பகுப்பாய்வாளர்கள் தகவல் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளனர். சந்தையிலுள்ள அரிசி வகைகளைப் பொறுத்தவரையில் பகுப்பாய்வாளர்கள் நடத்திய சோதனைகளில் ஐம்பத்துநான்கு விதமான மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதாகவும், அவற்றில் பதின்நான்கு முதல் இருபத்தாறு வீதம் வரையிலான அரிசிகள் மனித பாவனைக்கு உதவாத வகையாக இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவை பூஞ்சணம் (4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி பாதை திறப்பிற்கு 15 மில். ரூபா நிதி ஒதுக்கீடு

## அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரிகள் ஓரிரு நாட்களில் யாழ். வருவர்

[கொழும்பு]

பூநகரிப் பாதையூடாக உணவுப் பொருள்களைக் குடாநாட்டிற்கு எடுத்துவருவது தொடர்பான ஆரம்ப செலவினங்களுக்காக சுமார் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்ய ஜெனீவாவிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய தலைமை அலுவலகம் ஒப்புக் கொண்டுள்ளது. இதேவேளை இப்பாதையினூடாக உணவுப் பொருள்களை எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக இன்னும் ஓரிரு தினங்களில் ஐ. நா. அதிகாரிகள் இருவர் யாழ். வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படியாதையூடாக உணவுப் பொருள்களை குடாநாட்டுக்கு எடுத்துவருவது தொடர்பான ஆரம்ப செலவீனங்களுக்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் ஜெனீவா அலுவலகம் ஏற்றுக் கொண்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத்தொடர்ந்து மேற்படி ஆரம்ப செயற்பாட்டுக்கான சுமார் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உணவுப் பொருள்களை எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மீண்டும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். இன்னும் கள் உயர்ஸ்தானிக அலுவலகத்தின் கொழும்பு வதிவிட அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்சபையின் இலங்கைக்கான பிரதிநிதி ஆகியோரே யாழ்ப்பாணம் வரவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஊரடங்கு அமுலில் இருந்ததால்

# செஞ்சிலுவை அதிகாரிமீது தாக்குதல் நடத்தப்பட்டதாம்

[கொழும்பு]

கடந்த சனிக்கிழமையன்று விமானப்படையின் விமானத் தாக்குதலில் யாழ்ப்பாண இலங்கை செஞ்சிலுவைசங்கத்தின் உபதலைவர் கொல்லப்பட்டதை கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார்

எனினும் அப்போதுஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததாகவும் ... தெரிவித்தார்.

இடைக்காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் போது ஊரடங்குச் சட்டம் ஏதும் அமுல்செய்யப்பட்டிருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது அதே சமயம் ஊரடங்குச் சட்டவேளையிலும் அம்புலன்ஸ் வண்டிகள் நடமாட சர்வதேச சட்டங்கள் இடமளிப்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

## இல. வங்கி கிளைகளில் இன்று கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

...றது.

## இரண்டாவது தடவையாக புக்காரா தாக்குதல்

மன்னார் மாவட்டம் பரப்புக்கடந்தானில் நேற்றுமுன் தினம் 'புக்காரா' விமானம் இரண்டாவது தடவையாக மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீசித் தாக்குதலை நடாத்தியது. பிற்பகல் 1-20 மணியளவில் இப்பகுதிக்கு வந்த புக்காரா விமானம் இரண்டு குண்டுகளை வீசியது.

இதே தினம் காலை 10-30 மணியளவில் இப்பகுதியில் மூன்று குண்டுகளை வீசியமை தெரிந்ததே.

## நீண்ட நாட்களின் பின் மன்னார் படகு சேவை

(மன்னார்)

நீண்ட நாட்களின் பின் மன்னார் தீவுக்கான படகுச் சேவை கடந்த சனியன்று இடம்பெற்றது. மன்னார் தீவுக்குச் சென்று கல்விகற்கும் பாடசாலை மாணவர்களை ஏற்றிக்கொண்டு அன்றைய தினம் காலை 10 மணியளவில் ஆறு படகுகள் விடத்தல் தீவை வந்து சேர்ந்தன.

இப்படகில் வந்த 100 மாணவர்களுக்கு உதவியாக அரச அதிபர் குரு அவர்களும் வந்து திரும்பினார். விடத்தல் தீவு வந்த படகுகள் அங்கிருந்து யாரையும் ஏற்றாது திரும்பி விட்டன.

## மட்டு. கிராமத்தில் புதிய படை முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு 15 ஆம் கிராமம் என்ற இடத்தில் விசேட அதிரடிப்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். இப்புதிய முகாம் கடந்த வியாழனன்று அமைக்கப்பட்டது. இம்முகாம் அமைக்கப்பட்டதையடுத்து 15ஆம் கிராமம், வேம்படி, தம்பலவத்தை ஆகிய பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்.

## மட்டு. தமிழ் இளைஞன் சிங்களகாடையரால் கொலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு புல்லுமலை வெட்டிப்போட்ட சேனை என்ற பகுதியில் பொதுமகன் ஒருவர் சிங்கள காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது வண்டிலையும், மாடுகளையும் அவர்கள் கொண்டு சென்று விட்டனர். கடந்தவாரத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் இராஜலிங்கம் ராஜா (வயது 28 புல்லுமலை) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

## 1750 பரல் மண்ணெயுடன் "நில்கிரி" கப்பல் வரும்

(யாழ்ப்பாணம்)

நில்கிரி கப்பல் 1750 பரல் மண்ணெண்ணெயுடன் வரவுள்ளது.

வரும் 23ஆம் திகதி வருமென எதிர்பார்க்கப்படும் இக் கப்பலில் குடாநாட்டுக்கு என ஒதுக்கப்பட்ட 5000 பரல் மண்ணெண்ணெயின் ஒரு பகுதியான 1750 பரல் மண்ணெண்ணெய் எடுத்துவரப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து நேற்று யாழ். திருப்பிய அரசாங்க அதிபர் தெரிவித்தார். (சி)

கிளாலி - பூநகரி

## படகுச்சேவை

கிளாலி-பூநகரிபடகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்குநடைபெறுமென தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஊரடங்கு நீக்கம்

மன்னார் மாவட்டத்தில் அமுல்செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6.00 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## வீரச்சாவு



2ஆம் லெப். கபில்

தொண்டமானாறுபகுதியில் 10-4-93 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் கபில் [சின்னராஜா தேவராஜன், திருக்கோணமலை குச்சவெளி. தற்போதைய முகவரி மடுக்கோயில் மன்னார்] எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# மட்டு. தமிழ் இளைஞன் சிங்களகாடையரால் கொலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு புல்லுமலை வெட்டிப்போட்ட சேனை என்ற பகுதியில் பொதுமகன் ஒருவர் சிங்கள காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது வண்டிலையும், மாடுகளையும் அவர்கள் கொண்டு சென்று விட்டனர். கடந்தவாரத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் இராஜலிங்கம் ராஜா (வயது 28 புல்லுமலை) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

# 1750 பரல் மண்ணெய்யுடன் "நில்கிரி" கப்பல் வரும்

(யாழ்ப்பாணம்)

நில்கிரி கப்பல் 1750 பரல் மண்ணெண்ணெயுடன் வரவுள்ளது.

வரும் 23ஆம் திகதி வருமென எதிர்பார்க்கப்படும் இக்கப்பலில் குடாநாட்டுக்கு என ஒதுக்கப்பட்ட 5000 பரல் மண்ணெண்ணெயின் ஒரு பகுதியான 1750 பரல் மண்ணெண்ணெய் எடுத்துவரப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து நேற்று யாழ். திருப்பிய அரசாங்க அதிபர் தெரிவித்தார். (சி)



2ஆம் லெப். கபில்

தொண்டமானாறுபகுதியில் 10-4-93 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் கபில் [சின்னராஜா தேவராஜன், திருக்கோணமலை குச்சவெளி. தற்போதைய முகவரி மடுக்கோயில் மன்னார்] எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

...காக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் ஜெனீவா அலுவலகம் ஏற்றுக் கொண்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத்தொடர்ந்து மேற்படி ஆரம்ப செயற்பாட்டுக்கான சுமார் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை உணவுப் பொருள்களை எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மீண்டும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். இன்னும் ஓரிரு தினங்களில் இவ் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அகதிகளுக்கான ஐக்கியநாடு

# ஊரடங்கு அமுலில் இருந்ததால்

# செஞ்சிலுவை அதிகாரிமீது தாக்குதல் நடத்தப்பட்டதாம்

[கொழும்பு]

கடந்த சனிக்கிழமையன்று விமானப்படையின் விமானத் தாக்குதலில் யாழ்ப்பாண இலங்கை செஞ்சிலுவைசங்கத்தின் உபதலைவர் கொல்லப்பட்டதை கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார்

எனினும் அப்போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததாகவும் அந்நேரத்தில் அம்புலன்ஸ் வண்டி அங்கு நின்றிருக்கக்கூடாது எனவும் அவர் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதற்கான காரணத்தை தெரிவித்தார்.

இடைக்காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் போது ஊரடங்குச் சட்டம் ஏதும் அமுல்செய்யப்பட்டிருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது அதே சமயம் ஊரடங்குச் சட்டவேளையிலும் அம்புலன்ஸ் வண்டிகள் நடமாட சர்வதேச சட்டங்கள் இடமளிப்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

# இல. வங்கி கிளைகளில் இன்று கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் இன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை பணக் கொடுப்பனவுகளுக்காகமட்டும் திறக்கப் பட்டிருக்கும் என்று இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலத்தில்நிலவிய பணத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாகவும், வாடிக்கையாளரின் புத்தாண்டை ஒட்டியதேவைக்காகவும் இலங்கை வங்கியால் நேற்றும் பணம் தருவிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# ராணுவத்தின் பிடியில்சிக்கிய 12பேர் நேற்று விடுவிப்பு

(வடமராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது இளவாலையில் வைத்து இராணுவத்தினரின் பிடியில் சிக்குண்டு ஏழு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பன்னிரண்டு பேர் விடுவிக்கப்பட்டு நேற்று 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

இவர்களில் மூவர் எழுந்து நடக்க முடியாத வயோதிப நோயாளிகளாவர். இருவர் பெண்கள். தமது உடமைகளுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் கூட்டி வரப்பட்ட இவர்கள் பின்னர் செஞ்சிலுவைச் சங்க வாகனங்களில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர் இவர்களில் பலர் குடும்பத்தலைவர்களையும், உறவினர்களையும் பிரிந்திருந்தவர்களாவர்.

சிறில் யேசுரட்ணம் (வயது 16) இளவாலை, சிதம்பரநாதன் ரகுராஜ் (வயது 13) இளவாலை, பிலிப்பு மரியநாயகம் (வயது 42) இளவாலை, செல்வநாயகம் அன்னமேரி (வயது 37) இளவாலை, அந்தோனிப்பிள்ளை யோசேப்பிள்ளை (வயது 55) இளவாலை, தேவசகாயம் டேத் (வயது 67) இளவாலை, ஞானாம்பிகை நாகலிங்கம் (வயது 79) பன்னாலை, சந்தியாம்பிள்ளை சௌந்தரநாயகி (வயது 72) பன்னாலை, நடராசா பத்மநாதன் (வயது 37) இளவாலை. கணபதிப்பிள்ளை நடராசா (வயது 70) மாதகல், சிங்கராசா மதலேனம் (வயது 66) இளவாலை, அந்தோனிப்பிள்ளை சூசானம் (வயது 80) இளவாலை ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இதேவேளை இவர்களில் சிங்கராசா மதலேனம் என்பவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (யோ) (சி)

# அம்பனை வயல்கள் படையால் எரிப்பு

[மல்லாகம்]

நேற்றுமுன்தினம் வலிவடக்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், தங்கள் காப்பரண்களின் முன்னால் அமைந்திருந்த நெற்பயிர்களை தீவைத்து எரித்ததாக தெரியவருகிறது. இதற்கு முன்னரும், இதே பகுதியிலிருந்த சில வயற்காணிகளும் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் அளவெட்டிப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 'பரா'' வெளிச்சக் குண்டுகளையும் ஏவினர். இதனால், அளவெட்டி பிரதேச மக்கள் பெரிதும் பதற்றமடைந்தனர்.

# கல்முனை இராணுவம் சூடு ஒரு மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கல்முனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் யாழ். குடாக்கடல் பரப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று மீனவர் படகுகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர். இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை மேற்படி கடற்பரப்பில் கடல்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூன்று படகுகளில் சென்ற பதினைந்து மீனவர்களை நோக்கியே இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதில் சந்தியாப்பிள்ளை ஜெயம் (28வயது மேரியோசப் வீதி, நாவாந்துறை வடக்கு) என்பவர் காலில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏனையோர் படகுகளுடன் பாதுகாப்பாக கரையை வந்து சேர்ந்தனர் எனத் தெரியவருகின்றது. (பா)

# உலங்குவானூர்தி தாக்குதல்

(சுன்னாகம்)

நேற்று காலை 10.30 மணியளவில் கட்டுவன், ஏழாலை வடக்குப் பகுதிகளை வட்டமிட்ட இரு உலங்கு வானூர்திகள் இராணுவ நிலைகளை அண்டிய பகுதிகள் மீதும், வீடுகள் பார்க்கச் சென்ற மக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன சுமார் 20 நிமிட நேரமாக இத்தாக்குதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள் கப்பல் சேவை நடைபெறமாட்டாது

அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையிலிருந்து குடாநாட்டுக்கான பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ''நகர'' என்ற பயணிகள்கப்பல் ஒருதொகுதி பயணிகளுடன் நேற்று காங்கேசன் துறையை வந்தடைந்தது. இக்கப்பலில் வந்த பயணிகள் ''குமண'' என்ற கப்பல்மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர்.

இக்கப்பலின் பயணிகள் போக்குவரத்துச் சேவை தொடர்ந்தும் நடைபெறமாட்டாது என்று நேற்று கொழும்பில் இருந்து திரும்பிய யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

பொது எழுதுவினைஞர் சேவை;

# பரீட்சை முடிவுகள் அனுப்பிவைக்கப்பட்டன

பொது எழுதுவினைஞர் சேவைக்கான பரீட்சையில் தோற்றிய வெளி மாவட்ட வாசிகளுக்கான பரீட்சை முடிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொது எழுதுவினைஞர் சேவையில் வகுப்பு இரண்டு 'அ' பிரிவிலுள்ள அரச சேவையாளர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சையின் பெறுபேறுகளை அரசாங்க நிர்வாக மாகாண சேவைகள் அமைச்சு சம்மந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

# க.பொ.த. உயர்தர பரீட்சை மொத்தப்புள்ளி வந்தது

(யாழ்ப்பாணம்)

1992 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உ/த) பரீட்சையின் யாழ். மாவட்ட பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகள் நேற்று யாழ். கல்வித்திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இம் மொத்த புள்ளிகளில் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளை யாழ். மாவட்டத்தில் உள்ள 74 உயர்தரப் பாடசாலை அதிபர்களும் இன்று யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய மொத்த புள்ளிகள் இன்று தபாலில் சேர்க்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. [பா] [11], [9]

# புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளி 135

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டிற்குரிய விசேட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பரீட்சைத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப்புள்ளி 135 என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மேற்படி வெட்டுப் புள்ளியை பரீட்சைத் திணைக்களம் அறிவிக்காமையை அடுத்து யாழ். கல்வித் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தற்காலிக வெட்டுப்புள்ளி 150 ஆக அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. இவ் வெட்டுப் புள்ளி தற்போது 135 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொர்ந்து யாழ். மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க உள்ளது. [பா], (11), (9)

# அநுராதபுர காவலரண் மீது புலிகள் தாக்குதல்

## ஒரு இராணுவம் பலி

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவம் பலியானதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தில் இராணுவ தொடர்காவல் அரண்மீது மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் முன்னணிகாவல் அரணில் இருந்த இராணுவம் பலியானதாகவும் சிலர் காயம் அடைந்ததாகவும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழ்மக்கள் ஏற்கும் தீர்வை அரசு முன் வைக்கட்டும்

## -லங்கா ச. கட்சி கருத்து

[கொழும்பு]

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை முன் வைப்பதும், தொடர்ந்து கொண்டிருக்கும் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதும் இன்றைய அரசின் கடமையாகும் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான எஸ். இராமநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அண்மையில் வெளியிட்டிருக்கும் அவ் அறிக்கையில் மேலும், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசாங்கம் முன்வைக்கும் தீர்வு என்ன என்பதை அறிந்துகொள்ள நாட்டு மக்கள் அனைவருமே ஆவலாக உள்ளனர். இன்று வரை இனவாதிகள் இனவாத அடிப்படையிலேயே செயல்பட்டு வருகின்றனர். அண்மையில் இ.தொ.கா இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையை முன்வைத்த போதும் கூட அதன்தலைவர் தொண்டமான் இனவாத அரசியல்வாதிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

இன்றும் கூட இனப்பிரசினைக்கான எந்த யோசனையையும் முன்வைக்காமல் இருப்பது இருபெரும் கட்சிகளானஐ தே.கவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுமே ஆகும் இன்று சகல அதிகாரங்களையும் தன்னகத்தேகொண்டுள்ள இன்றைய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தனது யோசனையை முன்வைத்து அதை அமுல்படுத்த முன்வருவதாகஇல்லை என்றும் கூறியுள்ளார்.


## வரி விளம்பரம்

### ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக்கொண்டிருக்கின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

### தேவை

ஜாம் போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு. கோப்பாய்.(சி-6322)

நல்ல நிலையிலுள்ள 6' × 3' இரும்பு அலுமாரிகள் உடன் தேவை நல்ல விலை கொடுக்கபடும் .தொடர்பு: சங்கிலியன் விறகுகாலை 639 பருத்தித்துறைவீதி,முத்திரைச்சந்தி நல்லூர். (4668)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க கிருத்த வேலைகள் மிகவிரைவில் நல்ல முறையில் மலிவாகச் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (4660)

### இன்று செவ்வாய் மாற்றம்

புதுவருடப் பிறப்பு கைவிசேஷம், கைரேகை சாஸ்திரம் (இருதய ரேகையின் பலன்கள்) செவ்வாய் மாற்றம் அடங்கியவை ரூ 8 50 எங்கும் விற்பனையாகின்றது. குலசி ரேடர்ஸ், கல்வியங்காடுச்சந்தி (நூலாசிரியர் சத்யா) (4672)

உங்களை


## பாடசாலை நன்கொடை; அதிபர் ஒருவர் கைது

(கொழும்பு)

பாடசாலை அனுமதிக்காகப் பணம் வசூலிக்கும் பாடசாலை அதிபர்களைப் பிடிக்கும் முயற்சியில் லஞ்ச ஆணையாளர் திணைக்களம் இறங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்கும்போது 'நன்கொடை' என்ற பெயரில் பாடசாலைக்கோ அல்லது பாடசாலை அபிவிருத்திச் சபையின் பேரிலேயோ நன்கொடை வசூலிக்க வேண்டாம் என்று கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களை எச்சரித்துள்ளது என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாமாக முன்வந்து நன்கொடை வழங்கும் பெற்றோர்களுக்கு உரிய பற்றுச் சீட்டு வழங்கப்படும் என்றும், பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பணம் வசூலிக்கும் அதிபர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் அந்த முறைப்பாடுகள் தொடர்பாக அமைச்சினால் உரிய நடவடிக்கைஎடுக்கப்படும் என்றும், நன்கொடை வாங்கியது தொடர்பாக கொட்டாவாவில் ஒருஅதிபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## போதைப் பொருளுடன் இளம் பெண் கைது

(கொழும்பு)

சென்னையிலிருந்து ஏயர் லங்கா விமானத்தில் கொழும்பு திரும்பிய பெண் ஒருவர் ஒன்றரைகிலோ கிராம் ஹீரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன் தினம் காலை கொழும்பு விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

ஜிந்துப்பிட்டியைச் சேர்ந்த இப் பெண் தனது சூட்கேஸின் அடிப்பகுதியில்வைத்து இப் போதைப் பொருளை கடத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப் போதைப் பொருள் 15 இலட்சம் ரூபா பெறுமதியானது என அதிகாரிகள் தெரிவித்தனர். இவர் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## வடக்கு கிழக்கு படையினர் தபால் மூலம் வாக்களிப்பு

வடக்கு கிழக்கில் பணிபுரியும் படையினரும் பொலிஸாரும் மாகாணசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க வசதி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவர்கள் தமதுவாக்குகளை தபால் மூலம் அளிப்பதற்கான விண்ணப்பங்களைச் செய்வதற்கு தேவையான பத்திரங்கள் விமான மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


யாழ்ப்பாணம் அருள்மிகு
அத்தியடி பிள்ளையார் கோவில்


### விசேட வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

நவாலி மகாவித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கல்வி வளர்ச்சிக் கழகத்தின்ரின் அனுசரணையில் ஆண்டு 5 முதல் ஆண்டு 11வரையிலான மாணவர்களுக்கு பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் விசேட கல்வி வழங்கப்பட்டு வருவதாக நவாலி மகாவித்தியாலய உபஅதிபர் தெரிவித்தார்.

[05]


புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்.

A/L 95

| | |
|---|---|
| பொருளியல் | - ஞானேஸ் |
| கணக்கியல் | - Sam |
| வர்த்தகம் | - தேவா |
| அளவையியல் | - சோதி |
| அரசியல் | - கியூபேட் |
| தமிழ் | - குழந்தை |
| புவியியல் | - சண் |
| இ.நாகரிகம்) இந்துசமயம்) | - அருள்நங்கை |
| வரலாறு | - நாகராணி |
| கிறீஸ்தவம் | - அருட் சகோதரர் |

10-04-93 இல் வகுப்புக்கள் யாவும் ஆரம்பமாகிவிட்டன. [சி/6408]


## 300-ம் நாள் நினைவலைகள்

வீர ஜனனம்: 13 | 07 | 1977



வீரச் சாவு. 13 | 06 | 1992

### வீரவேங்கை நல்லையா

(தே. விஜயரஞ்சன்)

இளவயதில் இன்பத்தை இறுதிவரை ஏற்காமல்
பாசத்தை மறந்து பாசறைக்குப் போனாயே
போராடப் புறப்பட்ட நல்லையாவே
மண்மீட்பின் வேளையிலே செங்குருதி தானிழந்து
இம்மண்ணை சிவப்பாக்கி மாவீரன் வரிசையிலே

## செஞ்சிலுவை அதிகாரிக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

புக்காரா விமானத் தாக்குதலுக்குப் பலியாகிய யாழ்.செஞ்சிலுவைச்சங்க உபதலைவரின் பூதவுடல்நேற்றுமுன்தினம் காலை செஞ்சிலுவைச் சங்கத் தலைமையலுவலகத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

பத்தமேனிப் பகுதியில்இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியான நிவாரணம்வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது புக்காராவின் தாக்குதலுக்கு இலக்காகி இவர் மரணமடைந்தது தெரிந்ததே.

இந்த இறுதி அஞ்சலியில் பெருந்தொகையான மக்கள், சமூக சேவை நிலையங்களின் தொண்டர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அஞ்சலிக் கூட்டம் யாழ். கிளை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் சிங்கராஜா தலைமையில் நடைபெற்றது. துடிப்புமிக்க ஒரு கடமை வீரனின் துடிப்பு இன்று உறைந்துவிட்டது. இச்சம்பவம் எமக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

இதன்பின்னர் யாழ். கிளையின் செயலாளர் வி. கேகணேசலிங்கமும், கோப்பாய்க் கிளைச் செயலாளர் இ. மயில்வாகனமும் உரையாற்றினர். சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இருந்துவந்த செஞ்சிலுவைச் சங்கக் கிளையினர் இவரின் பூதவுடலுக்கு மலர்மாலை, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த இறுதி நிகழ்ச்சியில் யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதியும், உதவி வதிவிடப் பிரதிநிதியும் கலந்துகொண்டனர்.

இத்துடன் விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்

### வீரவணக்க கூட்டம்

உடுவில் தெல்லிப்பழை வட்டவைப் பிரதேசங்களின் ஏப்ரல் மாதம் வீர சாவடைந்த மாவீரர்களின் நினைவு வீர வணக்கக்கூட்டம் எதிர்வரும் 21-ம் திகதி உடுவில், தெல்லிப்பழை வட்டவைகளின் பொறுப்பாளர் திரு. ஒப்பிலறியன் தலைமையில் சுன்னாகம் தெற்கு கல்லாக்கட்டுவன் பூதரா கோயிலடியில் நடைபெறும்

## வெளிச்சம்இன்று வெளிவரும்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் சித்திரைமாத இதழ் இன்று வெளிவருகின்றது இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய அன்னை பூபதி பற்றிய நினைவுச் செய்தியும், புதுவை இரத்தினதுரை அவர்களின் பாடல் ஒன்றும் இடம் பெறுகின்றன. அத்துடன் சொர்ணகுமாரின் 'கல்லறை தழுவும் காற்று' — அ. மலரோனின் கருவறைகள்' —கிரீஷா ஜொவித்தாவின் 'நிமிர்தல்' ஆகிய சிறுகதைகளும் முருகையன், கி. சிவஞானம் ஆகியோரின் இரண்டு கவிதைகளும் உள்ளன. எண்பதுகளில் தமிழ்க் கவிதைகளின் போக்குகள் பற்றி சொக்கனும். நடனமும் உளவியலும் பற்றி சபா. ஜெயராசாவும் கட்டுரைகளை எழுதியுள்ளனர். யோ. எழிலி எழுதிய நாடகம் ஒன்றும், சுவாதித்திருநாள் எழுதிய சுவைக்குறிப்பும், புதுநிலம் பகுதியில் மா மயிலன், ந, கண்ணன். இத்தாவில் க. சிவராசா ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறுகின்றன.


## மாட்டுவண்டி சவாரி

யாழ்ப்பாணம் நியூ லலிதா யுவலறி ஆதரவில் ஆவரங்கால் வீனஸ் வி. க. நடாத்தும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி 13-04-93 இன்று பி. ப. 2 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் நடைபெறும்.

**பிரவேசம் ரூபா 10/-**

வீனஸ் வி. கழகம்

(4677)


## நினைவு கூருகின்றோம்...

த்த வேலைகள் மிகவிரைவில் நல்ல முறையில் மலிவாகச் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (4660)

### இன்று செவ்வாய் மாற்றம்

புதுவருடப் பிறப்பு கைவிசேஷம், கைரேகை சாஸ்திரம் (இருதய ரேகையின் பலன்கள்) செவ்வாய் மாற்றம் அடங்கியவை ரூ 8 50 எங்கும் விற்பனையாகின்றது. குலசி ரேடர்ஸ், கல்வியங்காடுச்சந்தி (நூலாசிரியர் சத்யா) (4672)

### உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

### மகாதேவா ஜோதிடம்

புதிய செய்திகளுடனும் உங்கள் இராசிப் பலன்களுடனும் ஸ்ரீமுகவருஷம் இதழ் எங்கும் விற்பனையாகின்றது. சோதிடரை, 140, செல்லர் வீதி, கல்வியங்காடு, நல்லூரில் சந்திக்கலாம். [4678]

### கண்டெடுப்பு

பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் பெண்களின் பணப்பேர்ஸ் ஒன்று பணத்துடன் பருத்தித்துறை டாக்டர் திரு. செல்லமுத்து பீதாம்பரத்தால் கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை வட்டவைக் காரியலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணப்பேர்ஸ்சைத் தவறவிட்ட பெண்மணி தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாமென பருத்தித்துறை வட்டவைப் பொறுப்பாளர் அறிவிக்கின்றார்.

★

மாம்பழம் சந்திக்கும் கண்டி வீதி தபால்கட்டை சந்திக்கும் இடையே வீதியில் கண்டெடுக்கப்பட்ட தங்கக் கைச் சங்கிலி ஒன்று எமது அலுவலகத்தில் இ. முனிஸ்வரன் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

நேற்று முன்தினம் காலை கொழும்பு விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

ஜிந்துப்பிட்டியைச் சேர்ந்த பெறுமதியானது என அதிகாரிகள் தெரிவித்தனர். இவர் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## வடக்கு கிழக்கு படையினர் தபால் மூலம் வாக்களிப்பு

வடக்கு கிழக்கில் பணிபுரியும் படையினரும் பொலிஸாரும் மாகாணசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க வசதி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவர்கள் தமதுவாக்குகளை தபால் மூலம் அளிப்பதற்கான விண்ணப்பங்களைச் செய்வதற்கு தேவையான பத்திரங்கள் விமான மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அருள்மிகு
அத்தியடி பிள்ளையார் கோவில்

## தேர் உற்சவம்

14-04-93 புதன்கிழமை [நாளை] காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசையும் பஞ்சமுகார்ச்சனையும, தொடர்ந்து காலை 9.00 மணிக்கு தேர் உற்சவமும் நடைபெறும்.

(சி-6406)

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 3.30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம் :

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி-6367)

## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

முகாமையாளர்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6366)

13 - 07 - 1977



13 - 06 - 1992

## வீரவேங்கை நல்லையா

(தே. விஜயரஞ்சன்)

இளவயதில் இன்பத்தை இறுதிவரை ஏற்காமல்
பாசத்தை மறந்து பாசறைக்குப் போனாயே
போராடப் புறப்பட்ட நல்லையாவே
மண்மீட்பின் வேளையிலே செங்குருதி தானிழந்து
இம்மண்ணை சிவப்பாக்கி மாவீரன் வரிசையிலே
சேர்ந்து விட்டாய்.

13-04-93ல் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்தில் சக போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கிருஷ்ணன் கோவிலடி,
பொன்னாலை,
சுழிபுரம். (4669)

உமது பிரிவால்
துயருறும்,
-குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி



## தங்கராசா சிவநேஸ்வரி

அன்னையின் மடியில் 1968-12-12

மண்ணின் மடியில் 1993-03-13

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
இருந்த அன்புச்சிவாவே
காலம் பல இருந்தும்
காலன் உன்னைப் பறித்து விட்டானே
காண்போமா இனி நாம் எம் கனியமுதை
பெற்றெடுத்த உன் செல்வங்கள்
பரிதவிக்க உன் உடன் பிறப்புகள்
உனை இழந்து தவித்திருக்க எம்மை
விட்டுப் பிரிந்தனையோ.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அக்காமார்,
அண்ணன்மார், தம்பி, உற்றார்,
உறவினர்.

வெள்ளம் போக்கட்டி
வடக்கு, கொடிகாமம். (4666)

குமாரின் 'கல்லறை தழுவும் காற்று' — அ. மலரோனின் கருவறைகள்' — கிரிஷா ஜெராசா வித்தாவின் 'நிமிர்தல்' ஆகிய பகுதியில் மா மயிலன், ந. கண்ணன், இத்தாவில் க. சிவராசா ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறுகின்றன.

## மாட்டுவண்டி சவாரி

யாழ்ப்பாணம் நியூ லலிதா யுவலறி ஆதரவில் ஆவரங்கால் வீனஸ் வி. க. நடாத்தும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி 13-04-93 இன்று பி. ப. 2 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் நடைபெறும்.

## பிரவேசம் ரூபா 10/-

வீனஸ் வி. கழகம்

(4677)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-13

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

குலம் (வீரக்குட்டி சந்திரமோகன் - இருதயபுரம், மட்டு)

1987ஆம் ஆண்டு மட்டு - கல்குடாச்சந்தியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வயிற்றில் வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய-

சுதர்சன் (கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் - பேத்தாழை, மட்டு.)

1988ஆம் ஆண்டு மட்டு - புதுக்குடியிருப்பில் தேச விரோதசக்திகளினால் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

ஈஸ்வரன் (தம்பிராசா ஆழ்வாப்போடி - புதுக்குடியிருப்பு-05, காத்தான்குடி, மட்டு.)

1989ஆம் ஆண்டு மட்டு-கல்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

குமார் (கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் - கல்குடா, மட்டு.)

தென்மராட்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

❋ ஜீவா (சின்னத்துரை இந்திரன் - மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை-சாவகச்சேரி-யாழ்.)

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த -

வள்ளல் (செல்வநாயகம் விஜயகுமார் - இல. 60. பாண்டியன்குளம், வவுனிக்குளம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6394)

## சிந்தனைக்கு

அற்புதச் செயலால் ஒரு மனிதனின் மனத்தை மாற்ற நினைப்பது. ஆன்மாவைக் கொச்சைப் படுத்துவதாகும்.

-ரால்ஃப் வால்டோ எமெர்ஸன்.


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## 'அபத்தமான' கேள்வி

வகுப்புவாத அடிப்படையிலான அரசியலை தத்தம் நாடுகளில் முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என 'சார்க்' அமைப்பின் தலைவர்களைக் கோரும் பிரகடனம் ஒன்றை பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ளன.

பங்களாதேஷ் எதிர்க்கட்சிகளின் இக் கோரிக்கையானது தென்னாசியப் பிராந்தியத்தை ஒரு முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்லக் கூடியதென்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை ஆனால், தென்னாசியாவில் இன்றைய அரசியற் சூழ்நிலையில் இது சாத்தியமாகுமா என்பதே கேள்வியாகும்.

'சார்க்' அமைப்பில் உள்ள நாடுகள் யாவற்றிலும் வேலையில்லாப் பிரச்சினை, பஞ்சம், பட்டினி என்பவற்றோடு இன, மத, சாதி வேறுபாடுகள் என்பன மலிந்து போயுள்ளன. இவையே இன்று இந்நாடுகளில் அரசியல் வாதிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ஆயுதங்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தென்னாசியாவிலுள்ள நாடுகளில் அநேகமானவை பெயரளவிலாகிலும் ஜனநாயக நாடுகளாகும். ஆனால் இந் நாடுகளின் ஆட்சி அதிகாரம் என்பது சாதி அடிப்படையிலும், மத அடிப்படையிலும், இன அடிப்படையிலும் வரையறுக்கப்பட்டவர்களின் கைகளிலேயே சென்றடைகின்றது.

இந்தியாவைப் பொறுத்து உலகிலுள்ள பெரிய ஜனநாயக நாடு என்ற பெயர் அதற்கு உண்டு. ஆனால், இந்தியாவின் அரசியல் ஜாதி, மத, மொழி, இன அடிப்படையில் வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. இதில் இன்று இந்தியாவில் எழுச்சி பெற்றுவரும் இந்து மத அடிப்படைவாதம் ஜனநாயக ரீதியாக சட்டங்களையும், மனித உரிமைகளையும் புறம் தள்ளி விட்டு ஒரு வகுப்புவாத அரசியலை நடத்துவதில் முனைப்பாக உள்ளது. இது இந்தியாவின் பெரும்பான்மை இந்துக்களின் உணர்வுகளுடன் பிணைக்கப்படுவதால் வகுப்புவாதம் என்பது ஒரு பெரும் வாக்கு வங்கியாகவே உருவாகியுள்ளது. இந்துக்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் ஆட்சியிலுள்ள கட்சியும் இந்துக்களின் உணர்ச்சியுடன் விளையாடி தமது அரசியல் எதிர்காலத்தை பரிசோதனைக்குரியதொன்றாகவே மாற்ற விரும்பவில்லை. எழுச்சி பெற்று வரும் மத அடிப்படைவாதத்து

# இனப்பிரச்சினை தீர்விற்கு புலிகளின் பங்களிப்பு தேவை

## தெரிவுக்குழுவிற்கு கடிதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இல்லாமல் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியற் தீர்வு ஒன்றைக்காண முடியாது என்று பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு எழுதிய கடிதமொன்றில் யாழ். மாவட்ட எம்.பியான சிறினிவாசன் தெரிவித்துள்ளார்

பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு அதன் தலைவர் மங்கள முனசிங்காவிற்கு ஊடாக எழுதப்பட்ட அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகளுக்கு தமிழ்மக்கள் மத்தியில் பெரும் அளவிலான ஆதரவு உண்டு என்பதும், அவர்கள் தமது அரசியல் அபிலாசைகளை எய்துவதற்கு தொடர்ந்து ஆயுதப்போரை முன்னெடுத்து வருகின்றனர் என்பதும் தெரிந்ததே. விடுதலைக்கான தாகம் தமிழ்மக்களிடையே பெருமளவில் கொழுந்துவிட்டு எரிகின்றது. அதற்கு பொருத்தமான மாற்றுத் திட்டம் வைக்கப்படாவிடில் அதனைத் தணித்துவிட முடியாது.

தமிழ் மக்கள் ஜனநாயக பூர்வமாக வெளிப்படுத்திய தமது அரசியல் அபிலாசையை கைவிடும் அதிகாரம் யாருக்கு உண்டு என்பதே இன்று மிகப் பெரும் கேள்வியாகியுள்ளது. 1977-ல் மக்களிடமிருந்து ஆணையைப் பெற்றுக்கொண்டதாக கூறிக்கொள்ளும் கூட்டணியினரா? அல்லது இப்போதும் தம்வசம் ஆயுதங்களைக் கொண்டிருக்கும் முன்னாள் போராட்ட அமைப்புகளா? அல்லது அயல் நாடுகளில் தங்கியிருக்கும் தத்தம் வாழ்விற்காக போரிடும் செல்வாக்கு இழந்த சக்திகளா? மக்கள் அளித்த இந்த ஆணையை மாற்றக்கூடியவர்கள் யார்?

கடந்த காலங்களில் பல போர் நிறுத்தங்களை கண்ட அனுபவம் எமக்கு ஒரு பாடம் ஆக வேண்டும். எனவேதான் எமது பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை முற்றாக தவிர்க்க வேண்டும் என்று அவாவுறுகின்றோம். குடியேற்றங்கள் நிறுத்தப்படவும், பொருளாதார தடை நீக்கப்படவும், நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கவும், மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மனிதாபிமானச் சூழலில் எமது மக்கள் வாழவும் சமாதானப் பேச்சுக்கள் தொடங்கப்பட வேண்டுமென விரும்புகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

பாடுமீன் விளையாட்டுக் கழகத்திற்கும் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற விறுவிறுப்பான சாம்பியன் மோதலில் பாடுமீன் கழகம் வெற்றி பெற்று சாம்பியன் கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அமரர் கே. குமரையா ஞாபகார்த்தமாக விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி வந்த உதைபந்தாட்ட நொக்கவுட்டு போட்டியின் சாம்பியன் மோதல் அண்மையில் அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றது.

மேற்படி போட்டிக்கு யாழ் செயலக புனர்வாழ்வு திட்ட பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். [42]

★

[பருத்தித்துறை]

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நடாத்தப்பட்ட தடகள விளையாட்டுக்களில் மூன்றாவது தடவையாகவும் முதலாம் இடத்தைப் பெற்றுவெற்றிக் கேடயத்தைத் தட்டிச்சாதனை நிலைநாட்டிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர் பருத்தித்துறை சிவன் கோவில் கலாமண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவிலே சாதனையை நிலை நாட்டிய வீரர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன

மாகாணசபை

## தேர்தலில் போட்டியிட இரு எம்.பிக்கள் பதவிதுறப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்இருவர் தமது பதவிகளைத் துறந்துள்ளனர். காலி மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான அமரசிறி தொடங்கொடவும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான நாவின்னவும் இவ்வாறு பதவி துறந்தவர்களாவர்.

சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலின்படி மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திற்கு ஏ. எச். எம். பௌசியும் கம்பஹா மாவட்டத்திற்கு சந்திரிகா குமாரணதுங்கவும், களுத்துறை மாவட்டத்திற்கு ரத்தினசிரி விக்கிரமநாயக்காவும், தலைமை தாங்குகின்றனர். முதலமைச்சர் பதவிக்காக மத்திய மாகாணத்தில் விஜேவிக்கிரமரத்தினவும், தென் மாகாணத்தில் அமரசிறி தொடங்கொடவும், வடமேல் மாகாணத்தில் எஸ்.பி.நாவின்னவும், வடமத்திய மாகாணத்தில் டி. சேமசிங்கவும், சப்பிரகமுவா மாகாணத்தில் தர்மதாஸ வன்னியாராச்சியும், ஊவா மாகாணத்தில் வில்பரட் ரத்னா நாயக்காவும் போட்டியிடுகின்றனர்.

## ஊழித்தீயாய்கனன்றெழுந்த உரிமைப் புயல் இவள்

அன்னை பூபதி
புதிய மலர்ச்சியின் உருவம்
பூமிப்பந்தையே
தம் பிடிக்குள் வைத்துள்ளதாக
பேரிரைச்சல் போட்ட
ஆணவக் காற்றை
அலைக்கழித்த
அற்புத சக்தி
'நேச'ப் படைகளின்
நீசத் தனங்களும்
கோழைக் கும்பலின்
குரூரத் தனங்களும்
ஆழப்பதிக்க முயன்ற
ஆதிக்க வேர் எரிக்க
ஊழித் தீயாய்
கனன்றெழுந்த
உரிமைப் புயல் இவள்
சுற்று வேலிக்குள்
சுமைதாங்கியாய் வாழ்வதிலும்
எட்டி உலகைப் பார்க்க மறந்து
வீடே உலகாய் வாழ்வதிலும் தான்
பெண்ணின் பெருமை உள்ளதென்ற
மடமை மரபைத் தகர்த்தாள்
தமிழ் மானம் காக்க எழுந்தாள்
'எம் தேசம் விடிந்தால்
வாழ்வோம் நாம்'
உறுதி எடுத்தாள்
உணவும் நீரும் துறந்தாள்
இமைக்க மறந்தது
இந்திய அரசு
எனினும்
சலுகையால்
மடக்க நினைத்து
மண் கவ்வியது
உயிரை உருக்கிடும்
உரிமைப் போரினுள்
அன்னையின் உணர்வுகள்
மெல்ல அடங்கிக் கொண்டிருந்தன
'அன்னை உயிர் பறிக்கவா
பசியாய் உருவெடுத்தேன்'
பரிதவித்தது பசி
உலகே
உன் விழிகளை மூடிவிட்டாயா?
ஓலமிட்டன உயிரினங்கள்
சுற்றிச் சுழன்றடித்த
காற்றும் கூட
கண்ணுக்கெட்டாத தூரமெங்கும்
அன்னையின் உயிர்த்தாகத்தை
எடுத்துரைத்து
ஏமாந்து திரும்பியது
பாரெங்கும்
பகல் வெளிச்சத்துள்ளும்
கரிய இருள்தான்
ஆதிக்கம் செலுத்தியது
நச்சு விதைகள்
நாலாபக்கமும்
முளை கொண்டிருந்தன
அன்னையின் இறுதித் துடிப்பும்
மெல்ல அடங்கியது
மனிதத்தை தொலைத்து விட்ட
நேசநாடுகளின்

வீரப்பனை பிடிப்பதற்காக

# ராணுவம் அழைக்கப்பட்டால் சமூகப்பிரச்சினை உருவாகும்

பட்டவர்களின் கைகளிலேயே சென்றடைகின்றது.

இந்தியாவைப் பொறுத்து உலகிலுள்ள பெரிய ஜனநாயக நாடு என்ற பெயர் அதற்கு உண்டு. ஆனால், இந்தியாவின் அரசியல் ஜாதி, மத, மொழி, இன அடிப்படையில் வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. இதில் இன்று இந்தியாவில் எழுச்சி பெற்றுவரும் இந்துமத அடிப்படைவாதம் ஜனநாயக ரீதியாக சட்டங்களையும், மனித உரிமைகளையும் புறம் தள்ளி விட்டு ஒரு வகுப்புவாத அரசியலை நடத்துவதில் முனைப்பாக உள்ளது. இது இந்தியாவின் பெரும்பான்மை இந்துக்களின் உணர்வுகளுடன் பிணைக்கப்படுவதால் வகுப்புவாதம் என்பது ஒரு பெரும் வாக்கு வங்கியாகவே உருவாகியுள்ளது. இந்துக்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் ஆட்சியிலுள்ள கட்சியும் இந்துக்களின் உணர்ச்சியுடன் விளையாடி தமது அரசியல் எதிர்காலத்தை பரிசோதனைக்குரியதொன்றாகவே மாற்ற விரும்பவில்லை. எழுச்சி பெற்று வரும் மத அடிப்படைவாதத்துடன் நேரடியாக மோதத் தயாராகவில்லை.

பாகிஸ்தானைப் பொறுத்தும் ஏறத்தாழ இதை ஒத்த நிலையே காணப்படுகின்றது. இஸ்லாமிய மத அடிப்படைவாதமே அங்கு கொலு ஓச்சுகின்றது. உள்நாட்டுப் பிரச்சினைகள் யாவற்றிற்கும் மத வடிவம் கொடுக்கப்படுவதோடு, மதக்குழுக்களுக்கிடையிலான போட்டிகளை அரசியல்வாதிகள் தமது அரசியல் லாபத்திற்காகப் பயன் படுத்தியும் கொள்கின்றன.

இலங்கையைப் பொறுத்தே சிங்கள பேரினவாத ஆட்சியை தமது அரசியல் அதிகாரத்தை நிலை நாட்டிக் கொள்வதற்காக சிறு பான்மை இனத்திற்கெதிராக இனவாத வன்முறையைத் தூண்டி வருவதோடு, வன்முறையில் ஈடுபடும் சிங்களவருக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கவும் முற்பட்டுள்ளது. இந்நிலை வளர்ந்து வன்முறையே சிறிலங்காவின் அரசியல் என்ற நிலை உருவாகிவிட்டது.

இவற்றைப் போன்றே ஏனைய 'சார்க்' அமைப்பு நாடுகளான பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகியவற்றின் நிலையும் காணப்படுகின்றது. இந்நாடுகளில் ஆட்சி அதிகாரம் என்பது வகுப்புவாதத்துடன் தொடர்பு படுத்தப்பட்டதாகவும், வன்முறை மிக்கதாகவும் மாறிவருகின்றது.

இதேவேளை இவ்வகுப்புவாத வன்முறைகளை ஒரு நாட்டில் இருந்து அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் இந் நாடுகள் அக்கறையாக செயற்பட்டு வருகின்றன. இந் நிலையில் வகுப்புவாத அரசியலைக் கை விடுதல் என்பது ஆட்சியில் இருப்பவர்களை பொறுத்து தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

இதற்கு மாறான நல்லதொரு நிலை இப்பிராந்தியத்தில் உருவாக வேண்டுமானால் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகள் யாவற்றிலும் தன்னலமற்ற தலைவர்கள் உருவாகவேண்டும். அவர்கள் சொந்த நலனைவிட நாட்டின் நிலையில் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு மதத்தின் மசூதியை இடிப்பவர்களினதும் ஓர் இனத்தினரைத் திட்டமிட்டு படுகொலை செய்பவர்களினதும் கைகள் ஓங்கிவரும் நிலை காணப்படும் தென்னாசியாப் பகுதியில் அவ்வாறானதொரு நல்ல சூழ்நிலை உருவாக நீண்ட காலம் வேண்டும். ஆனால் இந்நிலை உருவாகும் முன் இவ் அமைப்பிலுள்ள நாடுகள் வகுப்புவாதத்தின் மோசமான விளைவுகளில் மூழ்கிப்போய்விடும்.

த்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான அமரசிறி தொடங்கொடவும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான நாவின்னவும் இவ்வாறு பதவி துறந்தவர்களாவர்.

சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலின்படி மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட் பதவிக்காக மத்திய மாகாணத்தில் விஜேவிக்கிரமரத்தினவும், தென் மாகாணத்தில் அமரசிறி தொடங்கொடவும், வடமேல் மாகாணத்தில் எஸ்.பி.நாவின்னவும், வடமத்திய மாகாணத்தில் டி. சேமசிங்கவும், சப்பிரகமுவா மாகாணத்தில் தர்மதாஸ வன்னியாராச்சியும், ஊவா மாகாணத்தில் வில்பரட் ரத்னாநாயக்காவும் போட்டியிடுகின்றனர்.

யாகவும் முதலாம் இடத்தைப் பெற்றுவெற்றிக் கேடயத்தைத் தட்டிச்சாதனை நிலைநாட்டிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர் பருத்தித்துறை சிவன் கோவில் கலாமண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவிலே சாதனையை நிலை நாட்டிய வீரர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன

### வீரப்பனை பிடிப்பதற்காக

# ராணுவம்அழைக்கப்பட்டால் சமூகபிரச்சினை உருவாகும்

### -சட்டப்பேரவையில் ஜெயலலிதா

(சென்னை)

வீரப்பனை பிடிப்பதற்காக இராணுவத்தை வரவழைத்
மேமன் சகோதரர்களை
தால் அதனால் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் உருவாகலாம் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று சட்டப் பேரவையில் பேசும்போது குறிப்பிட்டார். பாட்டாளி மக்கள் கட்சியின் பண்ருட்டி ராமச்சந்திரனும் எதிர்க்கட்சியின் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் கொண்டுவந்த கவனஈர்ப்புத் தீர்மானத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகளுக்கும் வீரப்பனுக்கும் தொடர்புகள் இருப்பதாகக் கூறமுடியாது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை வீரப்பனை பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட விசேட காவல் படையினருக்கு போதிய பயிற்சி இல்லை என்றும், அவசரப்பட்டு விவேகத்தை பின்னுக்கு தள்ளி வீரம் காட்ட முனைந்தமையால்தான் இத்தகைய விளைவுகள் ஏற்பட்டன என்றும் சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் வீரப்பனை பிடிக்க இராணுவத்தை அழைக்க வேண்டும் என்று கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தியாவிடம் தரவேண்டும் பாகிஸ்தானுக்கு நிபந்தனை

(டில்லி)

பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக இந்தியாவினால் வேண்டப்படும் மேமன் சகோதரர்களை தேடிக் கண்டு பிடித்து இந்தியாவிடம் ஒப்படைத்தால்தான் இந்திய பாகிஸ்தான் உறவுகளில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைக்கு இடமிருக்கும் என்று இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் கூறியுள்ளார்.

டாக்காவில் நடைபெற்ற சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப்புடன் இரு நாட்டு உறவுகள் தொடர்பாக முப்பத்தைந்து நிமிட பேச்சுக்களின் போது இதனை அவருக்கு எடுத்துரைத்ததாகவும், டில்லி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும் போது குறிப்பிட்டார்.

அங்கு மேமன் சகோதரர்களின் வழக்கை பாகிஸ்தான் கையாளும் முறை குறித்து தமது அதிருப்தியை வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில் இந்த வழக்கில் இஸ்லாமாபாத்திடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்பதை நவாப் ஷெரீப்பிற்கு சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் சார்க் மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொரு தலைவர்களுடனும் இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியது தெரிந்ததே.

## ராணிப்பேட்டை தொகுதியில் ஆற்காடு வீரசாமி போட்டி

(சென்னை)

ராணிப்பேட்டை சட்டப் பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் தி. மு. க. வேட்பாளராக முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீரசாமி போட்டியிடுவார் என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; பழனி லோக்சபாத் தொகுதியிலும், ராணிப்பேட்டை சட்டப்பேரவைத் தொகுதியிலும் தமது கட்சி தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சி உட்பட அ. இ. அ. தி. மு. கவை எதிர்க்கும் அனைத்து சக்திகளினதும் ஆதரவைப்பெற தமது கட்சி முயற்சிக்கும் என்றும், தேர்தல் கூட்டணி தொடர்பாக அக்கட்சிகள் தத்தம் நிலையை விளக்கிய பிறகே முடிவு செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை மதவாதசக்திகளுக்கு எதிரான அணிக்கு எம். ஜி.ஆர். அண்ணா தி.மு.க. ஆதரவு தரும் என்று அக்கட்சியின் தலைவரான திருநாவுக்கரசு தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

### கூட்டத்தொடர் ஆரம்பம்

புதுடில்லியில் நேற்று உலகப் பாராளுமன்ற குழுவின் ஆறு நாள் கூட்டத்தொடர் ஆரம்பமாகியது. இவ் அமைப்பின் 89ஆவது கூட்டத் தொடரான இதனை இந்தியக் குடியரசுத் தலைவர் ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில் நாட்டின் எல்லைக்கு வெளியே இருந்து ஊக்குவிக்கப்படும் வன்செயல்களால் ஜனநாயக அமைப்பிற்கு ஆபத்து ஏற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

உலகே
உன் விழிகளை மூடிவிட்டாயா?
ஓலமிட்டன உயிரினங்கள்
சுற்றிச் சுழன்றடித்த
காற்றும் கூட
கண்ணுக்கெட்டாத தூரமெங்கும்
அன்னையின் உயிர்த்தாகத்தை
எடுத்துரைத்து
ஏமாந்து திரும்பியது
பாரெங்கும்
பகல் வெளிச்சத்துள்ளும்
கரிய இருள்தான்
ஆதிக்கம் செலுத்தியது
நச்சு விதைகள்
நாலாபக்கமும்
முளை கொண்டிருந்தன
அன்னையின் இறுதித் துடிப்பும்
மெல்ல அடங்கியது
மனிதத்தை தொலைத்து விட்ட
நேசநாடுகளின்
நாடி நரம்புகள்
சத்தியத்தீயின்
உக்கிரம் தாங்காமல்
உருகி உறைந்தன
'உயிரிலும் மேலானது – எம்
தாயகமானம்'
அன்னையின் வீரமும் ஈகமும்
உலகச் செவிக்குள் ஊற்றிய
உண்மை இது
உயிரைக் கொடுத்து
அன்னை அவள்
உணர்த்திய உயரிய நெறி இது

– வருணி

## கராச்சியில் குண்டுவெடிப்பு ஐவர்பலி; 65பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரின் பல்வேறு இடங்களிலும் நேற்று முன்தினம்காலையில் குண்டுவெடிப்புகள் ஏற்பட்டுள்ளன இக்குண்டுவெடிப்புகளில்சிக்கிஐந்துபேர்உயிரிழந்ததாகவும், சிந்துமாகாண முதல்வரின் தாயார் மற்றும் பரா இராணுவத்தினர் உட்பட அறுபத்தைந்துபேர் படுகாயம் அடைந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் முதல் கராச்சி நகரிலும் சிந்து மாகாணத்தின் ஏனையபகுதிகளிலும் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதும், அவர்கள் தமது ரோந்துப்பணிகளைத் தீவிரமாக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### தடை அமுலாகிறது

பொஸ்னியாஹர்சகோவியா பகுதியில் விமானங்கள் பறப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையினால் விதிக்கப்பட்டிருக்கும் தடையை அமுல்படுத்துவதில் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் (நேட்டோ) விமானப்படைகள் நேற்றுமுதல் ஈடுபட்டுள்ளன.

## லிபியா மீது தடை இறுகும்

1988ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்துக்கு மேலாக இடம் பெற்ற விமானக் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட இரு நபர்களையும் ஐ. நா. தீர்மானத்தின்படி விசாரணைக்கு ஒப்படைக்காவிட்டால் லிபியா மீது கடுமையான தடைவிதிப்பு தவிர்க்க முடியாதது என அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் எச்சரித்திருக்கிறார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களை லிபிய அரசு ஒப்படைக்காவிடின் கடும் பொருளாதார தடை விதிக்கும் நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும் என அவர் செய்தியாளரிடம் தெரிவித்தார். இதே சமயம் ஐ. நா. பாதுகாப்புச் சபை ஒரு ஆண்டுக்கு முன் லிபியா மீது தான் விதித்திருந்த தடையை தொடர்ந்து அமுல்நடத்தும்,என்றும் குற்றவாளிகள் ஒப்படைக்கப்படாவிட்டால் மேலும் கடும் தடை விதிக்கும் எச்சரிக்கையை அது விடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈழநாதம்

கல்வியியல் கல்லூரிகளில்

## தமிழ்மாணவர்களுக்கு 25 வீத இட ஒதுக்கீடு வேண்டும்

—அம்பகமுவ பிரதேசசபை தீர்மானம்

(கொழும்பு)

சிறீபாத கல்வியியல் கல்லூரியில் 25 சதவீதமான இட ஒதுக்கீடுகள் சிங்கள மாணவர்களுக்கு ஒதுக்கப்படுமாயின் ஏனைய சகல கல்வியியல் கல்லூரிகளிலும் தமிழ் மாணவர்களுக்கு அதேயளவு இடங்கள் ஒதுக்கப்படல் வேண்டுமென்று அம்பகமுவ பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் க. கனகராஜ் கொண்டுவந்த பிரேரணையை உடனடியாக ஏற்றுக்கொண்டு அவைத் தலைவரும், ஏனைய உறுப்பினர்களும் இப் பிரேரணை சம்பந்தமாக பிரதேச சபை தன்னாலியன்ற அனைத்தையும் செய்ய முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

மேலதிக நடவடிக்கைக்காக நான்குபேர் கொண்ட நடவடிக்கைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் அம்பகமுவ பிரதேசத்தின் அம்பகமுவ கல்விக் காரியாலயத்தின் கீழ் செயற்படும், நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்திற்கும் சிங்கள மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான காணிப் பிரச்சினை சம்பந்தமாகவும் பேசப்பட்டதோடு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச சபையில் கோரப்பட்டது.

## வீரவணக்க கூட்டம்

[வடமராட்சி]

வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் 3ஆம், 4ஆம் மாதங்களில் வீரச்சாவெய்திய 42 மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. சங்கீதன் தலைமையில் சுப்பர் மடம் சித்தி விநாயகர் விளையாட்டு அரங்கில் இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தை சுப்பர் மடம் கிராமிய கடல்தொழிலாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. [யோ]

## 1-ம்இடம்பெற்ற மாணவனின் தெரிவு நீக்கப்பட்டது

### குறைந்த வயது காரணம்

சென்ற ஆண்டு (1992-ல்) நடைபெற்ற 5-ம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் இலங்கையில் முதலிடம் (199 புள்ளிகள்) பெற்றதாக அறிவிக்கப்பட்ட ஜோன் பொஸ்கோ மாணவன் குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வயதிலும் குறைந்த வயதில் தோற்றியதன் காரணமாக அவரது தெரிவு நீக்கப்பட்டுள்ளது. மேற்படி தெரிவுக்கான வயதெல்லை 28 யூலை 81 தொடக்கம் 27 யூலை 82 வரையானதாகும், இவரது வயது குறித்த எல்லையில் அமையாததால் தெரிவு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இரண்டாமிடத்தைப் (197 புள்ளிகள்) பெற்ற மாணவர்களான சண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியும், ஆனைப்பந்தி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையைச் சேர்ந்த மோகனஜீவ என்ற மாணவனும் முதலாமிடத்தைப் பெறுகின்றனர்.

இவருக்கு ஜப்பானிய அரசாங்கத்தின் புலமைப் பரிசில் ஒன்று கிடைக்கவுள்ளது. மாத வருவாய் அடிப்படையில் இவருக்கு மட்டும் இந்த வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆசிய பசுபிக் மாநாட்டு அமைப்பின் ஆதரவுடன் இவருக்குக் கிடைக்கும் இந்த வாய்ப்பில் இவர் ஜப்பானிய கலாசார அமைப்புடைய குடும்பமொன்றுடன் குறிப்பிட்ட காலமொன்றைக் கழிக்கவுள்ளார்.(09)(11,(பா)

க. பொ. த. (சா/த)

## செய்முறைப் பரீட்சைகள் ஏப்ரல் 20இல் நடக்கும்

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத் தராதர (சா/தர) பரீட்சை - 1992 டிசம்பர் இற்கான சங்கீதம் (கர்நாடகம்), நடனம்(பரதம்) ஆகியவற்றிற்குரிய செயன்முறைப் பரீட்சை இம்மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சைக்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை இம்மாதம் 16ஆம் 19ஆம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் சேகரித்து பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படி பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [பா]

## சிறுவனிடம் சைக்கிளை பறித்துச் சென்றவர் கைது

சிறுவன் ஒருவனை ஏமாற்றி சைக்கிளை பறித்துச் சென்ற வயோதிபர் ஒருவர் தமிழீழ காவல் துறையினரிடம் பிடிபட்டார். சில தினங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரி வீதியில் ... மாறு பிரஸ்தாப வயோதிபர் கேட்டாராம். சிறுவன் மனமிரங்கி அவ் வயோதிபரை ஏற்ற முற்பட்ட போது "நீ சின்னப்பிள்ளை நானே உன்னை ஏற்றி ஓடுகிறேன்" என அவ் வயோதிபர் கூறி ...

## கருத்தரங்குகள்

(தொல்புரம்)

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளால் விசேட கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்குவட்டு கிழக்கு தாவளை சனசமூக நிலையத்தில் இன்று இரவு 7-30 மணியளவில் இடம்பெற உள்ளதென சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. து. வெற்றிச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மேலும் நாளை இரவு 7-30 மணியளவில் சங்கரத்தை தமிழன் சனசமூக நிலையத்திலும், தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூகநிலையத்திலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [41]

உலங்கு

நடைபெற்றது எனினும் இத்னால் சேதமேதும் ஏற்பட்டதாக தெரிய வரவில்லை.

இதேவேளை நேற்று முன்தினம் பி.ப. 2.00 மணியளவில் கட்டுவன் இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களையும் நடாத்தினர். இதன் ...

மனித

படித்த நிலையில் அல்லது பழுதடைந்த நிலையில், அல்லது அளவுக்கு அதிகமான ...

## பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிகழ்ச்சி முறையாளர்/நிகழ்ச்சி ஆராய்ச்சியாளர் பதவிகள் வெற்றிடம் நிரப்பப்படவுள்ளது.

இதுசம்பந்தமான விபரங்கள் 26-03-93 ஆம் திகதிய வர்த்தமானியில் உள்ளது. கணனி விஞ்ஞான புள்ளிவிபரவியல், மக்கள் பொருளியல், கணிதம் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் சிறப்புப்பட்டம் அல்லதுகணித பாடத்துடன் சேர்ந்த 1ஆம் 2ஆம் வகுப்பு பொதுப்பட்டதாரிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத்திகதி ஏப்பிரல் 30ஆம் திகதியாகும்.

மேலதிக விபரத்தினை யாழ்.செயலக மாவட்ட புள்ளி விபரவியலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் (சி)

### கூட்டம் ஒத்திவைப்பு

எதிர்வரும் வியாழனன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 22-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட உப தலைவர் கடமையின்போது சிறிலங்கா விமானப்படையின் தாக்குதலுக்குப் பலியானதை கண்டித்து அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் தொண்டர் அமைப்புக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டனப் பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இக்கண்டனப் பேரணியை நடாத்துவதற்கான ஒழுங்குகள்பற்றி இன்று 3.00 மணிக்கு யாழ். வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

சில அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைமைக் காரியாலயங்கள் கொழும்பில் இயங்குவதால் அவற்றுடன்தொடர்பு கொண்டு இதுபற்றிய முடிவை எடுக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை உபதலைவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஊழியர்கள் கண்டனக் கூட்டங்களை நடாத்தியதுடன் கறுப்புப் பட்டி அணிந்து அவசர சேவைகளைச் செய்வதற்கு மட்டுமே தயார்நிலையில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி) (நி)

### பென்சன் வவுச்சர் வந்தது

(யாழ்ப்பாணம்)

ஏப்பிரல் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர் நேற்று யாழ். செயலகத்திற்கு வந்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

நேற்றுப் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த வாதுவ என்ற கப்பலிலேயே இவ்வவுச்சர் எடுத்துவரப்பட்டது.

அத்துடன் உணவு முத்திரையும், இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு முத்திரையும் மற்றும் இதுவரை யாழ். செயலகத்தில் தட்டுப்பாடாக இருந்துவந்த 1954 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட பிறப்பு அத்தாட்சிப்பத்திரப் படிவமும் வந்துள்ளதாக தெரியவருகின்றது. (சி)

### நேர்முகப் பரீட்சை

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தரம் 2 அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சையின்போது நாட்டின் நிலைமை காரணமாக சமுகமளிக்க முடியாதவர்களுக்கான விசேட நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20-07-93 இல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி விசேட நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியவர்களான42 பேருக்குரிய விபரங்களை கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [11], [9]

உதைபந்தாட்டம்

### நிர்வாக சேவை பரீட்சைகள்

அரச உத்தியோகத்தர்களுக்கான இலங்கை நிர்வாக சேவையின் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை எதிர்வரும் மேமாதம் 29ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுதுவினைஞர்களுக்கான அதிசிறப்புதர பரீட்சையில்கலந்து கொள்ளாதவர்களுக்கான விசேட பரீட்சைஎதிர்வரும்மே மாதம்29ஆம்திகதிகொழும்பில் நடாத்தப்படவுள்ளது. இப் பரீட்சைக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான பரீட்சார்த்திகளும் தோற்ற சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்றமுறை கொழும்பில் நடைபெற்றசிற்றூழியர் பதவிகளுக்கான பரீட்சைஇம்முறை எதிர்வரும் மேமாதம் 08ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் உள்ள ஆறு பரீட்சை மையங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (11), (9)

## கலிபர் தாக்கு

[தொல்புரம்]

காரைநகர் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் பொன்னாலைக் கடற்பரப்பினை நோக்கிக் கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. [41]

## அதிகாரிகள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட சர்வதேசசெஞ் ...

### 42 ஆவது ஆண்டு நிறைவு விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் 42ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 6-00 மணிக்கு மங்கள விளக்கேற்றலும், பின் நிலையத் தலைவர் திரு. க: நடராசா நிலையக் கொடியை ஏற்றிவைப்பார்.

தேசியக் கொடியைப் பிரதேசப் பொறுப்பாளர் ஏற்றிவைத்து நிலைய மாணவிகளால் தேசிய கீதம் பாடப்படும். விளையாட்டு போட்டிகள் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (24)

## சம்பள கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கான மார்கழி, தை, மாசி மாதங்களுக்கான சம்பளக்கொடுப்பனவுகள் எதிர்வரும் வியாழக்கிழமை 12-00 மணி முதல் வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளது ஏற்கனவேபண்டிகைமுற்பணம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 53 வது ஆண்டு விழா

(தொல்புரம்)

அராலி ஸ்ரீ முருகன்சனசமூக நிலையத்தின் 53 வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி விழா நிலையத் தலைவர் சி. தனஞ்சயன் தலைமையில் நிலைய மைதானத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு ஆரம்பமாகும். இவ் வைபவத்தில் சமுதாய நெறிப்பிறழ்விற்குக்குற்றவாளி ...

கருத்தரங்குகள் நடாத்தப்பட வுள்ளன.

மேற்படி கருத்தரங்குவட்டு கிழக்கு தாவளை சனசமூக நிலையத்தில் இன்று இரவு 7-30 மணியளவில் இடம்பெற உள்ளதென சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. து. வெற்றிச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மேலும் நாளை இரவு 7-30 மணியளவில் சங்கரத்தை தமிழன் சனசமூக நிலையத்திலும், தொல்புரம் விக்னேஸ் வரா சனசமூகநிலையத்திலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. [41]

மனித

பிடித்த நிலையில் அல்லது பழுதடைந்த நிலையில், அல்லது அளவுக்கு அதிகமான அளவில் மணல் மற்றும் சிறு கற்கள் கலக்கப்பட்டிருக்கின்ற நிலையில் காணப்படுவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது

இதனையடுத்து இரண்டாமிடத்தைப் (197 புள்ளிகள்) பெற்ற மாணவர்களான சண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியும், ஆனைப்பந்தி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையை சேர்ந்த மோகனஜீவ் என்ற மாணவனும் முதலாமிடத்தைப் பெறுகின்றனர்.

இவருக்கு ஜப்பானிய அரசாங்கத்தின் புலமைப் பரிசில் ஒன்று கிடைக்கவுள்ளது. மாத

உலங்கு

நடைபெற்றது எனினும் இத்னால் சேதமெதுவும் ஏற்பட்டதாக தெரிய வரவில்லை.

இதேவேளை நேற்று முன்தினம் பி. ப. 2.00 மணியளவில் கட்டுவன் இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களையும் நடாத்தினர். இதன் போது ஏவப்பட்ட எறிகணைகள் இராணுவ நிலைகளை அண்டிய பகுதிகளிலேயே வீழ்ந்து வெடித்தன. (11)

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத் தராதர (சா/தர) பரீட்சை - 1992 டிசம்பர் இற்கான சங்கீதம் (கர்நாடகம்), நடனம்(பரதம்) ஆகியவற்றிற்குரிய செயன்முறைப் பரீட்சை இம்மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சைக்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை இம்மாதம் 16ஆம் 19ஆம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் சேகரித்து பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படி பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [பா]

## சிறுவனிடம் சைக்கிளை பறித்துச் சென்றவர் கைது

சிறுவன் ஒருவனை ஏமாற்றி சைக்கிளை பறித்துச் சென்ற வயோதிபர் ஒருவர் தமிழீழ காவல் துறையினரிடம் பிடிபட்டார். சில தினங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரி வீதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சைக்கிளில் வந்து கொண்டிருந்த சிறுவனிடம் தன்னையும் ஏற்றிச் செல்லுமாறு பிரஸ்தாப வயோதிபர் கேட்டாராம். சிறுவன் மனமிரங்கி அவ் வயோதிபரை ஏற்ற முற்பட்ட போது ''நீ சின்னப்பிள்ளை நானே உன்னை ஏற்றி ஓடுகிறேன்'' என அவ் வயோதிபர் கூறி சிறுவனிடமிருந்து சைக்கிளை வாங்கிக் கொண்டு ஒரே மிதியில் அவ் விடத்தில் சிறுவனை விட்டுவிட்டு ஓடினாராம், சிறுவனும் வயோதிபரின் பின்னாலேயே ஓட, அந்த நேரத்தில் காவல்துறையினரும் வாகனத்தில் வந்து விசயமறிந்து சிறுவனையும் ஏற்றிக் கொண்டு சென்று வயோதிபரை சைக்கிளுடன் மடக்கினர் என கூறப்படுகிறது. முலவைச் சந்தியில் இருந்து சைக்கிளை பறித்துக் கொண்டு ஓடியவர் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அண்மையில் வைத்து பிடிக்கப் பட்டாராம். [22]

திரப் படிவமும் வந்துள்ளதாக தெரியவருகின்றது. (சி)

### நேர்முகப் பரீட்சை

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தரம் 2 அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சையின்போது நாட்டின் நிலைமை காரணமாக சமுகமளிக்க முடியாதவர்களுக்கான விசேட நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20 - 07 - 93 இல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி விசேட நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியவர்களான42 பேருக்குரிய விபரங்களை கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [11], [9]

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப்போட்டி இன்று செவ்வாய் மாலை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இன்று மாலை 3.00 மணிக்கு புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கென்றியன் விளையாட்டுக் கழகமும், மாலை 4.00 மணிக்கு அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

(11), (9)

## கலிபர் தாக்கு

[தொல்புரம்]

காரைநகர் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் பொன்னாலைக் கடற்பரப்பினை நோக்கிக் கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. [41]

## அதிகாரிகள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்றுத் தமது விஜயத்தை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினர். (நி)

12-00 மணி முதல் வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளது ஏற்கனவேபண்டிகைமுற்பணம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 53 வது ஆண்டு விழா

(தொல்புரம்)

அராலி ஸ்ரீ முருகன்சனசமூக நிலையத்தின் 53 வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி விழா நிலையத் தலைவர் சி. தனஞ்சயன் தலைமையில் நிலைய மைதானத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு ஆரம்பமாகும். இவ் வைபவத்தில் சமுதாய நெறிப்பிறழ்விற்குக்குற்றவாளி ''விஞ்ஞானியே'' என்ற தலைப்பில் வழக்காடுமன்றமும் 'கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (14)


## சர்வதேச விதிகளை மீறி யாழ். செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் பலியாக்கப்பட்டமைக்கு அதிருப்தியைத் தெரிவிக்குமுகமான

# ஆலோசனைக் கூட்டம்

இடம் : யாழ். வை. எம். சி. ஏ. மண்டபம்
காலம்: 13-04-93 (இன்று) மாலை 3.00 மணி

அச்சுவேலிப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின்போது உயிர்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவேளை சர்வதேச விதிகளைமீறி செஞ்சிலுவைக் கொடியை உதாசீனம் செய்து வீசப்பட்ட குண்டுக்குப் பலியாகிய யாழ். செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் திரு. க. புவனேந்திரன் அவர்களுக்கு ஏற்பட்ட சம்பவம் மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், தொண்டர்கள் ஆகிய எம் அனைவருக்கும் பொதுவானதாகவே கருதுகிறோம்.

சர்வதேச விதிமுறைகளைக் கண்காணித்து தமிழீழ மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், தாம் சார்ந்த அமைப்பின் சார்பான ஒருவரையே பாதுகாக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தொண்டர் அமைப்புக்கள் இச்சம்பவம் தொடர்பாக மௌனம் சாதிக்கின்றன.

தொண்டர்கள், பணியாளர்கள் ஆகிய நாம் மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டிருந்தவேளை திரு. க. புவனேந்திரன் அவர்கள் பலியாக்கப்பட்டமைக்கான எமது அதிருப்தியைக் காட்டுமுகமாக எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக 13-04-93 (இன்று) மாலை 3.00 மணிக்கு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் (யாழ்ப்பாணம்) ஆராயவுள்ளோம். மேற்படி கூட்டத்தில் சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கும்படி கோருகிறோம்.

அமைப்புக்குழு,
சமூகசேவை அமைப்புக்களின்
தொண்டர்கள், பணியாளர்கள்.

(சி-6411)



பிரதேசச் செயலகம், நல்லூர்

## புத்தாண்டு தின விழா

இடம்: இளங்கலைஞர் மன்ற கலா மண்டபம்
(சட்டநாதர் வீதி, நல்லூர்.)

காலம்: 15-4-1993 வியாழன் பி. ப. 4.00 மணி.

பிரதம விருந்தினர்:
திரு. திருமதி. கா. மாணிக்கவாசகர்
(அரசாங்க அதிபர், மாவட்ட ஆணையாளர்
யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
திருமதி ம. சண்முகதாஸ்
திரு. வே. பொ. பாலசிங்கம்
(யாழ், மாநகர ஆணையாளர்)

கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

எமது பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பொது மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லூர் பிரதேசச் செயலாளரும்,
பணியாளர் குழுவும்.

பிரதேசச் செயலகம்,
நல்லூர்.
12-4-93.

விளம்பர அன்பளிப்பு:
பொஸ்கோ (சி-6410)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 12-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9032

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-6452, 41-2479, 26-4657, 27-0994, 28-6623,
24-5015, 26-0691, 24-5437, 28-2212, 41-2659,
27-4920, 28-4255, 26-9495, 27-8160, 40-7351,
26-0767, 24-7225, 42-1046, 24-9825, 27-2016,
26-9703, 42-1325, 27-9772, 26-3410, 22-1647,
42-6159, 28-1020, 42-2862, 42-3964, 26-4450
26-4436, 24-5707, 22-6922, 26-6842, 26-4691,
28-1110, 27-4673, 24-5140

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4238, 27-9779, 26-0649, 41-9876 25-0536,
41-4719, 41-9989, 24-9337, 43- 2666

## மரண அறிவித்தல்

## சீனியராசா பொன்னு

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது கந்தரோடையில் வசித்தவருமான சீனியராசா பொன்னு நேற்று அகாலமரணமானார். அன்னரர் சீனியராசாவின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி, விஜயகுமார் (போராளி-இன்பன்), சிவனேஸ்வரி, அருணகிரிநாதன், கெங்காதரன் (போராளி - வேங்கை) சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும். அப்புத்துரை இரத்தினத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று [13-4-93] பி. ப. 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து சுன்னாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கணவன், பிள்ளைகள்

[சி-6412]